# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2013 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

---

*(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013, ஏப்பிறல் மாதம் 26 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## *2013 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்*

[*2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.- ஓ. 3/2013*

### *1988ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

***1.*** *இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், எல்லா நோக்கங்களுக்குமாக 2013, சனவரி 1ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.*

*1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2005ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-*

*"(1அ) ஓராம் உட்பிரிவின்கீழ் அறவீட்டைச் செலுத்து வதற்குஆளாகவுள்ள ஆள் ஒவ்வொருவருக்கும், அத்தகைய அறவீட்டுக் கொடுப்பனவுடன் சேர்த்து, ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அவரால் கொண்டு நடாத்தப்படும் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தொழில் களின் மொத்த சேகரிப்பு மீது ஐந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று விதிக்கப்படுதல் வேண்டும் :*

*ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின்கீழ் அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஆள், அத்தகைய சேகரிப்பின் மீது 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச்சட்டத்தின்கீழ் சேர்பெறுமதி வரியினை செலுத்துவதற்கு அல்லது 2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டி யெழுப்புதல் வரிச் சட்டத்தின் கீழ் நாட்டைக் கட்டியெழுப் புதல் வரியைச் செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது :*

ஆயின், மேலும் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தொழில்கள் தொடர்பில் எந்த ஆளுடைய மொத்தச் சேகரிப்பானது மாதமொன்றுக்கு ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சவில்லையோ, அத்தகைய ஆள் இவ்வுட் பிரிவின்கீழ் செலுத்தப்பட வேண்டும் எனத் தேவைப் படுத்தப்பட்ட அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது.

(1ஆ) (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் அறவீட்டைச் செலுத்து வதற்கு ஆளாகியுள்ள ஒவ்வொரு ஆளும் -

(அ) இயைபான காலாண்டின் முடிவை அடுத்துவரும் மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், அத்தகைய ஆளின் மொத்தச் சேகரிப்புப் பற்றி ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத் திலானதும் மற்றும் அத்தகைய விபரங்களைக் கொண்டதுமான விபரத் திரட்டொன்றை ஒன்றில் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத் துதவுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அம்மாதத்தின் முடிவை அடுத்துவரும் மாதத்தின் முதலாவது வாரம் முடிவடையும் அன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய அறவீட்டினை செலுத்துதல் வேண்டும்.

(1இ) (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் அறவீட்டைச் செலுத்து வதற்கு ஆளாகவுள்ள எவரேனும் ஆள், அத்தகைய அறவீட்டைச் செலுத்துவதற்கு தவறுமிடத்து, இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2), (3), (4), (5) மற்றும் (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீட்டைச் செலுத்துவதற்கான அத்தகைய தவறுகை தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(1ஈ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) "மொத்தச் சேகரிப்பு" என்பது அம்மாதம் தொடர்பில் குதிரைப் பந்தய பணயக்காரரின் தொழிலிலிருந்து அல்லது சூதாட்டத் தொழிலிலிருந்து அறவிடப்பட்ட மொத்தத் தொகை என்று பொருள்படும் ;

(ஆ) "இயைபான காலாண்டு" என்பது ஏதேனும் ஆண்டின் சனவரி முதலாம் நாளன்று, ஏப்பிறல் முதலாம் நாளன்று, யூலை முதலாம் நாளன்று அல்லது ஒற்றோபர் முதலாம் நாளன்று தொடங்கும் மூன்று மாத காலப்பகுதி எனப் பொருள்படும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்தல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தாற் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"பந்தய அல்லது சூதாட்ட தொழில்களைப் பதிவுசெய்தல்.*

2அ (1) 2013 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், 2ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றதான குதிரைப் பந்தய பணயக்காரரின் தொழிலை அல்லது சூதாட்டத்தைக் கொண்டு நடாத்தும் ஒவ்வோர் ஆளும் விடயத்திற் கேற்ப இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஐந்து மாதக் காலப்பகுதியினுள் அல்லது தொழில் தொடங்கிய தேதியிலிருந்து ஒருமாதக் காலப்பகுதியினுள் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோராளுக்கும் அவ்வாளின் பெயர், முகவரி, பதிவிலக்கம் மற்றும் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடிய

வாறான வேறு எவையேனும் விபரங்கள் என்பவற்றைக் கொண்டுள்ள பதிவுச்சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

''(1) ''வரிமதிப்பீட்டாளர்'', ''ஆணையாளர் தலைமையதிபதி'', ''பிரதி ஆணையாளர்'' மற்றும் ''ஆட்கள்'' என்னும் சொல்லமைப்புக்களின் வரைவிலக்கணங்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக் கணத்தை இடுவதன் மூலமும் :-

''வரிமதிப்பீட்டாளர்'', ''ஆணையாளர் தலைமையதிபதி'', அத்துடன் ''பிரதி ஆணையாளர்'' என்பன மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின் 59 ஆம் பிரிவினால் முறையே அவற்றுக்கு குறித்தொதுக்கப்பட்ட அந்தந்த கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(2) "சூதாட்டம்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-

"ஆள்" என்பது ஏதேனும் கம்பெனி, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழு அல்லது ஏதேனும் பங்குடைமையை உள்ளடக்கும்;".

செல்லுபடியாகுதல்

**5.** இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு சனவரி 1 ஆந் தேதி தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது எவரேனும் ஆளிடமிருந்து ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் அறவிடப்பட்டு, சேகரிக்கப்பட்ட அறவீட்டுத் தொகை ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் அத்தகைய எவரேனும் ஆளினால் செல்லுபடியாகும் முறையில் அறவிடப்பட்டு சேகரிக்கப்பட் டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயினும், இப்பிரிவின் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிவையோ அல்லது கட்டளையையோ அல்லது அக்காலப்பகுதியின்போது அறவிடப்பட்டு சேகரிக்கப்பட்ட ஏதேனும் அறவீடு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளையோ பாதித்தல் ஆகாது.

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான அட்ட வணையினை மாற்றீடு செய்தல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையானது இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன், அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :-

**"அட்டவணை I** *(பிரிவு 2)*

பாகம் I

இதற்கான I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் ஒவ்வோராண்டுக்கும் குதிரைப்பந்தயப் பணயத் தொழிலர் என்னும் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆளொருவரினாற் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை, இதற்கான IIஆம் நிரை யிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்-

| *நிரை I* | *நிரை II* |
|---|---|
| **ஆண்டு** | **விதிப்பனவின் தொகை** |
| 1. 1988,ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்,ஆனால் 2011,ஏப்பிறல் 1ஆம் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஒவ் வோராண்டுக்கும் | ஒரு லட்சம் ரூபா. |
| 2. 2001, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2002, ஏப்பிறல் 1ஆம் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் - | பத்து லட்சம் ரூபா. |
| 3. 2002,ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2005, ஏப்பிறல் 1ஆம் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்- | |
| (i) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நேரடி ஒளிபரப்புவசதிகள் பயன் படுத்தப்படுமிடத்து; | முப்பதாயிரம் ரூபா. |
| (ii தொழிலைக்கொண்டுநடாத்துவதில் நேரடி ஒளிபரப்புவசதிகள் பயன் படுத்தப்படாதவிடத்து. | பத்தாயிரம் ரூபா. |
| 4. 2005, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2006, ஏப்பிறல் 1ஆம் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் செய்யப்படும் பந்த யத் தொழிலுக்காக- | |
| (i) முகவர்கள் மூலம். | பத்து லட்சம் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகளைப் பயன் படுத்துவதன் மூலம். | இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா. |

| | |
|---|---|
| (iii) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நேரடி ஒளிபரப்புவசதிகள் பயன்படுத் தப்படாதவிடத்து | இருபத்தையாயிரம் ரூபா. |
| 5. 2006, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால், 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோ ராண்டுக்கும் செய்யப்படும் பந்தயத் தொழி லுக்காக- | |
| (i) முகவர் மூலம். | பத்து லட்சம் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நேரடி ஒளிபரப்புவசதிகள் பயன் படுத்துவதன்மூலம். | மூன்றுலட்சம் ரூபா. |
| (iii) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நேரடி ஒளிபரப்புவசதிகள் பயன்படுத் தப்படாதவிடத்து. | ஐம்பதினாயிரம் ரூபா. |
| 6. 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோ ராண்டுக்கும் செய்யப்படும் பந்தயத் தொழிலுக் காக - | |
| (i) முகவர் மூலம். | இருபது லட்சம் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நேரடிவசதிகள் பயன்படுத்துவதன்மூலம். | மூன்றுலட்சம் ரூபா. |
| (iii) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நேரடி ஒளிபரப்புவசதிகள் பயன்படுத் தப்படாதவிடத்து. | இருபத்தையாயிரம் ரூபா. |

பாகம் II

இதற்கான, I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் ஒவ்வோராண்டுக்கும் சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்தும் ஆளொருவரினாற் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை, இதற்கான II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்-

| நிரை I<br>ஆண்டு | நிரை II<br>விதிப்பனவின் தொகை |
|---|---|
| 1. 1988,ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும். | பத்து லட்சம் ரூபா. |
| 2. 2001, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2002, ஏப்பிறல் 1ஆம் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும். | இரண்டு கோடியே ஐம்பது லட்சம் ரூபா. |
| 3. 2002, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2005, ஏப்பிறல் 1ஆம் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்- | |
| (i) சூதாட்டக் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக (ருட்ஜினோ விளையாடுதல் தவிர) | ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா. |
| (ii) ருட்ஜினோ மட்டுமே விளையாடுதல் என்னும் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக | ஐந்து லட்சம் ரூபா. |
| 4. ருட்ஜினோவிளையாடுதலுட்பட சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக, 2005, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | ஐந்து கோடி ரூபா |
| 5. ருட்ஜினோவிளையாடுதலுட்பட சூதாட்டத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்காக, 2013, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | பத்துக் கோடி ரூபா |

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7**. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்